11th March 1966]

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சிவசுப்பிரமணியன் : சிதம்பரத்தில் ஜனநெருக்கம் அதிகமாக இருப்பதாலும், வளர்ந்து வரும் நிலையில் இருப்பதாலும் அங்கு இரண்டாவது பஸ் ஸ்டாண்டை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த மாதிரி இன்னொரு பஸ் ஸ்டாண்டு வேண்டுமென்பதற்காக ஒரு கவுன்சிலர் தீர்மானம் கொண்டுவந்து அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. சிதம்பரம் டவுனில் அநேகமாகக் காலி இடம் கிடைப்பதில்லை. பெரும்பாலும் கோயிலுக்குச் சொந்தமான இடங்களாகத்தான் இருக்கின்றன. புறம்போக்கு நிலம் அநேகமாகக் கிடையாது என்று சொல்லலாம். அங்கு இருக்கிற லாரி ஸ்டாண்டு ஒன்றில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான சாமான்களைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்தக் காலி இடம் இந்த பஸ் ஸ்டாண்டுக்காகக் கிடைக்கும் நிலைமை ஏற்பட்டால் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்கள் சிதம்பரத்திற்கு வந்திருந்தபோது கொடுத்த வரவேற்பில், சென்ற ஆண்டு கொடுத்ததில் குறிப்பிட்டிருக்கிறார்கள் இது பற்றி. நேற்றுக் கூட போய் வந்தார்கள். இதற்கான திட்டம் விரைவுபடுத்தப்படும் என்று உறுதிமொழி அளிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சம்பந்தப்பட்ட சாமான்கள் அந்த இடத்திலிருந்து காலி செய்யப்பட வேண்டும். புதை வடிகால் திட்டம் 1967-68-ல் முடிவடையும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பின்னால்தான் இதைக் கவனிக்க முடியும்.

Panchayat Elections

* 286 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether Police bandobust was arranged for holding panchayat elections of Moongilpadi Panchayat at Senai Goundanur village (Omalur Block, Salem district);

(*b*) whether complaints from the elected members that they were obstructed from attending the meeting by show of force, by a rival group was received by the Police; and

(*c*) whether any case has been registered in this connection?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை

[14th March 1966

பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலின்போது சச்சரவுகள் ஏற்படும் என்று எதிர்பார்த்த இடங்களில் போலீஸ் பந்தோபஸ்து ஏற்பாடு செய்யப்பட்டது. மூங்கில்பாடி பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலை நடத்த நியமிக்கப்பட்ட தேர்தல் சாவடித் தலைமை அதிகாரி போலீஸ் பந்தோபஸ்து தேவை எனக் கேட்கவில்லை. எனினும், சட்டத்தையும் ஒழுங்கையும நிலைநிறுத்துவதற்காக போலீஸ் ரோந்துப் படையினர் 17—4—1965 தேதியன்று காலை 11-30 மணியளவில் ஷை பஞ்சாயத்துக்குச் சென்று தேர்தல் அமைதியாக நடந்ததெனத் தெரிந்துகொண்டனர்.

(இ) ஆம்.

(உ) வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. புலன் விசாரணை செய்த பின்னர், இவ்வழக்கு நீதிமன்ற வரம்புக்குட் பட்ட வழக்கு அல்லவென்று போலீஸ் தெரிவித்துள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இம்மாதிரி வழக்குகள் தமிழகத்தில் பஞ்சாயத்துக்களில் நிறைய நடைபெறுகின்றன. ஆனால், போலீசார் இந்த வழக்கைப போடாமல், இது வழக்கு போடு வதற்குத் தகுதியில்லை என்று தள்ளி விட்டார்கள் என்று சொன் னார்கள். பப்ளிக் ப்ராசிக்யூட்டரின் ஆலோசனை கேட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்கு ஆலோசனை தேவை என்றிருந்தால் கலந்திருப் பார்கள், இல்லை என்றால் கலந்திருக்கமாட்டார்கள். விவரமான தகவல் இல்லை.

திரு. மு. கருணாநிதி : புகார் மீது தொடரப்பட்ட வழக்குத் தனிப்பட்ட முறையில் தொடரப்பட்டதா ? இல்லை, அதிகாரிகள் மூலம் தொடரப்பட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனிப்பட்ட முறையில்தான்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*— **An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—CALLING ATTENTION TO ADVERSE SEASONAL CONDITIONS AND RELIEF MEASURES.

MR. SPEAKER : Eleven hon. Members have given notices under Rule 41 calling attention of the Hon. Minister for Food to the adverse seasonal conditions prevailing in their respective districts.

Hon. Members Sri K. S. Mani, Sri S. Ramasamy, Pulavar K. Govindan and Sri A. Perumal may now call the attention of the Hon. Minister for Food to the matter raised in their respective notices.

திரு. கோ. சி. மணி : கனம் தலைவா அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சென்ற பசலியில் பருவ மழை இல்லாத காரணத் தினால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக பாதிக்கப்